the rice mill industry, I want the Hon. Minister to make a clear-cut statement in regard to this matter and allay the fears entertained by the rice-mill owners?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I am surprised that the hon. Member belonging to the Party which has passed a resolution in Bhubaneshwar on those lines, is having apprehensions about it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 234-வது வினா 12—7—1967 வரையில் தள்ளிப்போடப்படுகிறது.

விசைப் படகுகள்

***235 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மீன் பிடிப்பதற்கு உபயோகப்படும் மோட்டார் படகுகள் தற்போது எத்தனை உள்ளன?

(இ) இதனை மேலும் அதிகப்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) தற்போது 370 விசைப் படகுகள் மீன்பிடிப்பதில் ஈடுபட்டுள்ளன.

(இ) உண்டு.

திரு. என். சங்கரய்யா : சாதாரண படகுகளுக்குப் பதிலாக இந்த மின்விசைப் படகுகள் கொடுக்கப்படுவதினால் மீனவர்களுக்கு கிடைக்கக்கூடிய வருமானம் எந்த அளவு அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சாதாரண படகிலே போகிறவர்கள் குறைந்த அளவுதான் மீன் பிடிக்க முடியும். விசைப் படகிலே போகிறவர்கள் நிறைய மீன் பிடிக்கக்கூடிய நிலையில் அதிக வருமானத்தைப் பெறுவதற்கு வழி இருக்கிறது.

திரு. எஸ். ராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தப் படகுகளைச் சரியான முறையில் ஓட்டுவதற்கு மீனவர்களுக்கு ஒரு பயிற்சி தரப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது பயிற்சி அளிக்கப்பட்டுத்தான் வருகிறது.

திரு. ப. மகாதேவன் : படகுகள் கொடுப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாகவும், அந்த உத்தரவைத் தளர்த்தியிருப்பதாகவும் அறிகிறேன். நல்ல மீன் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கும் நேரத்தில், உடனடியாக அந்தப் படகுகளைக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே வழங்கப்பட உத்தரவிடப்பட்ட படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது உண்மைதான். அது பரிசீலனையில் இருக்கிறது. அது சம்பந்த

மாகச் சில புகார்கள் வந்து, விவசாய இலாக்கா காரியதரிசி அதை ஆராய்ந்திருக்கிறார்கள். இப்பொழுது 'லா டிபார்ட்மெண்ட்' அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். கூடிய விரைவில் படகுகள் வழங்கப்படும்.

திரு. கெ. இர. ஞானசம்பந்தன் : படகுகளுக்கு இயந்திரம் பொருத்துவதிலும், படகுகளை விநியோகிப்பதிலும் பெருமளவிற்கு தாமதம் ஏற்படுகிறது. அதனால், மீனவர்களுக்குக் கஷ்டம் வருகிறது என்று நாகையிலிருந்து புகார் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே மார்ச் மாதத்திலே கொடுக்கப்படுவதாக இருந்த படகுகள்தான் இன்னும் வழங்கப்படாமல் இருக்கின்றன. அவற்றைத் தவிர வேறு படகுகள் ஒன்றும் தடைப்படுத்தப்படவில்லை. அது சம்பந்தமாக புகார் ஏதாவது இருந்தால், முதல் கேள்விக்குக் கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்குரிய பதில்தான் இந்தக் கேள்விக்கும் பொருந்தும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : மீனவர்களுக்கு வழங்கப்படுகிற விசைப் படகுகளில் பல ரகப்பட்ட இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாக, ஏர் கூலிங், வாட்டர் கூலிங் என்று இரண்டு பிரிவாகப் பிரித்து, வாட்டர் கூலிங்கிலேயே யான்மார் இன்ஜினைப் பொறுத்த வரையில், விசைப் படகுகள்தான் பலனளிக்கின்றன என்று அரசாங்கத்திற்கு மனுக் கொடுத்திருக்கிறார்களா? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : யான்மார் இன்ஜினுக்குத்தான் அதிகக் கிராக்கி இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். மேல்நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் இன்ஜின்களுக்குத்தான் அதிக மோகம் இருக்கிறது. இங்கே உற்பத்தியாகிற இன்ஜின்களுக்கு அவ்வளவு கிராக்கி இல்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்படி இரண்டு வகையான இன்ஜின்கள் மீனவர்களுக்கு வழங்கும் நேரத்தில்தான், சீட்டுக் குலுக்கிப் போட்டு, யாருக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகிற இன்ஜின் விழுகிறதோ அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதுபோலவே, மற்ற இன்ஜின்களும் அந்த முறையில்தான் வழங்கப்பட்டு வருகின்றன. இதிலே எந்த முறையைக் கையாளலாம், குறைபாடுகளை எந்த முறையில் நீக்கலாம் என்பதற்கு, சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரரையும் வைத்துக்கொண்டு, சீட்டுப் போட்டு எடுக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறது. இப்பொழுது குறிப்பிட்ட சிலருக்கு யான்மார் இன்ஜின்களும், வேறு சிலருக்கு வேறு இன்ஜின்களும் கொடுக்கப்படுவது இத்தகைய குறைபாட்டுக்கு இடம் அளிக்கிறது. ஆனால், தவிர்க்க முடியாத அளவில், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் இன்ஜின்களையும் உள்நாட்டில்

1967 ஜூலை 10]

செய்யப்படுகின்ற இன்ஜின்களையும் சர்க்கார் இப்பொழுது வழங்கி வருவதால் அந்தக் குறைபாடு இருந்துகொண்டு வருகிறது. இந்தக் குறைபாடு பரவலாகத் தீர்க்கப்படுவது குறித்து யோசனை செய்யப்பட்டு வருகிறது.

கால்நடைக் காப்புறுதித் திட்டம்

*236 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாடுகளுக்கான இன்சூரன்ஸ் திட்டம் அமுலில் வந்து விட்டதா?

(இ) இல்லையென்றால், எப்போது முதல் அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இவ்வேலைத் திட்டம் இம்மாநிலத்தில் இன்னும் செயலுக்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) நான்காவது திட்டக்காலத்தில் கால்நடைக்காப்புறுதித் திட்டத்தைக் Cattle Insurance Scheme குறிப்பிட்ட சில பகுதிகளில் முன்னோடி அடிப்படையில் செயல்படுத்த வேண்டும் என வேளாண்மைப் புள்ளிவிவர ஆராய்ச்சிக் கழகம் (இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்) கருத்து தெரிவித்துள்ளது. காப்புறுதி செய்யத்தக்க வயதுள்ள மாடுகள், எருமைகள், இவற்றின் மரண வீதம் பற்றி குறிப்பிட்ட சில பகுதிகளில் புள்ளி விவரம் சேகரிக்க ஆய்வு ஒன்றை முன்னோடி வேலையாக நடத்த வேண்டும் என இக்கழகம் விருப்பம் தெரிவித்தது. காப்புறுதிக் கட்டண விதங்களையும் இழப்பீடு விவரங்களையும் கணக்கிடுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வு வேலை 4—7—1966 முதற்கொண்டு விலங்கின வளர்ப்புத்துறையினால் காஞ்சீபுரம் ஸ்ரீபெரும்பூதூர் கால்நடை வளர்ச்சி மும்முரத்திட்டப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு வேலை முடிந்து, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தினால் காப்புறுதிக் கட்டண விதங்கள் நிச்சயிக்கப்பட்டவுடன்தான், குறிப்பிட்ட சில பகுதி களில் கால்நடைக் காப்புறுதி வேலைத்திட்டம் முன்னோடி அடிப் படையில் செயல்படுத்தலாம்.

திரு. என். சங்கரய்யா: கால்நடைகளுக்குப் பலவிடங்களில் பெரிய அளவில் சேதம் ஏற்பட்டு, விவசாயிகள் பாதிக்கப்படுவதால் கால்நடை இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை இந்த மாநில சர்க்கார், இந்த ஆய்விற்குப் பிறகு ஏற்றுக்கொண்டு, நான்காவது ஐந்தாண்டுத்திட்டம் முடிவடைவதற்குள் முக்கியமான மாவட்டங் கள் பலவற்றுள் இதை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டபடி, இப்பொழுது ஆய்வு வேலைகள் நடந்து கொண் டிருக்கின்றன. பசு, எருமை மாடுகளின் வயது என்ன, எவ்வளவு காலம் அவை உயிரோடு இருக்கும், ப்ரீமியம் எவ்வளவு கட்ட